# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
## S.C. NO. 131/2021

**05.12.2024. அ.சா. 7 பாஸ்கரன் த.பெ. வெள்ள மூஞ்சி**

**எதிரிகள் தரப்பில் குவிமுச. 311 மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி 7 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

A1 to A3 present.

நான் அ.சா.2 மீனாவின் மகன் என்றால் சரிதான். என்னை போலிசார் 09.03.2017 அன்று தென்னமரத்தெருவில் உள்ள சம்பவ இடத்திற்கு அருகே பார்வையிட்டபோது விசாரித்தார்கள். என்னை சுமார் காலை 06.00 மணிக்கு மேல் போலிசார் விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலிஸ் அதிகாரியின் பெயர் மற்றும் பதிவியை கேட்டால் முத்தைய செட்டி என்கிற உதவி ஆய்வாளரும், குமார் என்கிற ஆய்வாளரும் விசாரித்தார்கள். தென்னமரத்தெரு என்று எனது கிராமத்தில் ஒரு தெருதான் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தெருவில் என்னுடைய வீடு இல்லை. என் வீடு தென்னமரத்தெருவில் உள்ளது என்றால் சரிதான். நான் போலிசார் விசாரணை செய்தபோது இரண்டு கையொப்பம் செய்தேன். நான் கையால் எழுதப்பட்ட பேப்பரில்தான் கையோப்பம் போட்டேன். வரைபடம் போட்ட பேப்பரில் கையொப்பம் செய்யவில்லை. நான் கையொப்பம் செய்த பேப்பரில் இருந்த முழு விவரமும் எனக்கு தெரியும். போலிசார் அந்த இடத்தை பார்வையிட்டு ரத்தம் படிந்த காரை மற்றும் ரத்தம் படியாத காரை , வளையல்கள், கயிறு ஆகியவற்றை எடுத்ததை பற்றி எழுதியிருந்தார்கள். வேறு ஏதாவது இருந்ததா என்றால் அதை பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் 09.03.2017 அன்று காலை 06.00 மணிக்கு என் நண்பன் சரண்ராஜ் உடன் தென்னமரத்தெருவில் பேசிக்கொண்டிருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அந்த தேதியில் போலிசார் அந்த இடத்திற்கு வந்து பார்வையிடவும் இல்லை. பார்வை மகசரோ அல்லது வரைபடமோ எதுவும் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பார்வை மகசரில் கையொப்பமும் இடவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் முன்னிலையில் எந்த சாண்று பொருட்களும் போலிசாரால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரில் நான் கையொப்பம் இடவில்லை சொன்னால் சரியல்ல. என்னை போலிசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு

விஷயமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால்  சரியல்ல.  சாட்சி ரவி மற்றும் மீனா கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் நான் அதை மறுக்கிறேன்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath., M.L.,**
Additional District Judge,
Tiruvannamalai.